## பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

# " அழைக்கப்பட்டவர்கள் அநேகர் தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர். "

மத்தேயு 22:14

செய்தி மலர்
2024
அக்டோபர்

இதழ் : 18
மலர் : 20



## சபை ஊழியரின் அன்பு மடல்



# இதோ திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான அன்பு சகோதர சகோதரிகளே, உங்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் உங்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த செப்டெம்பர் மாதம் முழுவதும் நம்மை பாதுகாத்த தேவன் வரும் அக்டோபர் மாதத்திலும் நம்மை கிருபையால் வழி நடத்துவாராக.

நம் ஆண்டவருடைய குணாதியசம் என்னவென்றால் நம்மிடத்திலுள்ள சிறிய பொருளைக் கொண்டு அதை வர்த்திக்கப்பண்ணி நமக்கே கொடுப்பார். நம்மிடத்தில் கொஞ்சம் விசுவாசம் இருந்தால் போதும் அதை அவரிடமே கொடுக்கும்பொழுது அதை அதிக ஆசீர்வாதமாக மாற்றி அதை நமக்கே திருப்பிக்கொடுப்பார். ஏதை ஆண்டவர் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறரோ அதை அவருக்கே கொடுக்கும் போது அதை வாத்திக்கப் பண்ணி நமக்கே கொடுப்பார். சில உதாரணங்களை கீழ்க்கண்ட பகுதிகளில் பார்க்கலாம்.

## 1. படகு...

ஒரு முறை பேதுரு இரவெல்லாம் மீன்பிடித்து ஒன்றும் கிடைக்காமல் சோர்வோடு காணப்பட்டபோது அந்த படகை தரையிலிருந்து சற்றே தள்ளும்படி கேட்டுக்கொண்டு அந்தப் படகில் உட்கார்ந்து ஜனங்களுக்கு போதகம் பண்ணினார். (லூக்-5:1-11) பிரியமானவர்களே பேதுருவே மீன் கிடைக்காமல் இரவெல்லாம் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படாமல் இருதயம் சோர்வுற்று கலங்கி நின்ற வேளையிலே அவனுடைய படகை இயேசு கேட்டு வாங்கினார். அவனும் மறுக்காமல் கொடுத்தான். வெறொரு ஆளாக இருந்திருந்தால் நானே கவலையாக இருக்கிறேன் நீர் போதகம் பண்ணுவதற்கு என் படகுதான் கிடைத்ததா?

என்று கேட்டிருப்பார்கள். ஆனால் பேதுரு படகை கொடுத்ததினால் என்ன நடந்தது தெரியுமா? அவர் போதகம் பண்ணி முடித்த பிறகு ஆழத்திலே தள்ளிக்கொண்டு போய் மீன் பிடிக்கும்படி வலையை போடச்சொன்னார், மீன் பிடிப்பதில் திறமை பெற்ற பேதுரு ஐயரே இரா முழுவதும் பிரயாசப்பட்டோம் ஒன்றும் அகப்படவில்லை. ஆகிலும் உம்முடைய வார்த்தையின் படியே வலையைப் போடுகிறேன் என்றான். அந்தப்படி அவர்கள் செய்து தங்கள் வலை கிழிந்துப் போகத்தக்கதாக மிகுதியான மீன்களை பிடித்தார்கள். மற்ற படகில் உள்ளவர்களையும் உதவிக்கு அழைத்தார்கள். இரண்டு படவுகள் அமிழத்தக்கதாக திரளான மீன்களை பிடித்தார்கள். என் அன்பு சகோதர சகோதரிகளே, கொஞ்சமாக இருந்தாலும் முதலில் உங்களிடம் உள்ளதை தேவனுக்கு கொடுங்கள். அப்பொழுது கர்த்தர் உங்களை வர்த்திக்க பண்ணி அநேக ஆசீர்வாதங்களை கொடுப்பார். கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும். அமுக்கி குலுக்கி சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியிலே போடுவார்கள் நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார்.

(லூக்-6:38) என்று வசனம் கூறுகிறது. மக்கேதொனியா சபையினர் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில் கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும் தங்கள் பரிபூரண சந்தோ\த்தினாலே மிகுந்த உதாரத்துவமாய் தங்கள் திராணிக்கு தக்கதாகவும், தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுத்தார்கள். அந்த உபகாரம் பரிசுத்தவான்களுக்கு தர்மம் செய்யப்பட்டது. (2-கொரி-8:1-4) பிலதெல்பியா சபையை பார்த்து கர்த்தர் கூறினார் " உனக்கு கொஞ்சம் பெலன் இருந்து நீ என் நாமத்தை மறுதலியாமல் என் வசனத்தைக் கைக்கொண்டபடியால் இதோ திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன். அதை ஒருவனும் பூட்ட மாட்டான். என்று (வெளி-3:8)ஆகவே ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்க்கிற கீழ்ப்படிதல் வசனத்தின் மேல் விசுவாசம் கடவுள் மேல் நம்பிக்கையை நாம் வைக்கும்பொழுது நம்மையும் ஆசீர்வதிப்பார்.

## 2. சாறிபாத் ஊர் விதவை...

இஸ்ரவேல் தேசமெங்கும் பஞ்சம் உண்டாயிருந்தபொழுது தீர்க்கதரிசியாகிய எலியாவை சாறிபாத்துக்கு போகச்சொன்னார் அவர் வந்த போது அந்த விதவை விறகு பொறுக்கிக்கொண்டிருந்தாள். எலியா அவளைப்பார்த்து கூப்பிட்டு நான் குடிக்கிறதற்கு கொஞ்சம் தண்ணீரும் கொஞ்சம் அப்பமும் கொண்டுவா? ஏன்றான் பாருங்கள் அவளே பஞ்சத்தில் அடிப்பட்டு கிடக்கிறாள் அவளிடம் தண்ணீரும் அப்பமும் கேட்கிறான். அந்தப்

பெண் தயங்கி ஐயா, என்னிடமுள்ள எண்ணெயும் கொஞ்சம் மாவும் உண்டு நானும் என் குமாரனும் சாப்பிட்டு பிறகு செத்து போக இரண்டு விறகு பொறுக்குகிறேன் என்றாள். ஆனால் எலியாவோ பயப்படாதே முதலில் எனக்கு கொண்டு வா பின்பு உனக்கும் உன் குமாரனுக்கும் பண்ணலாம் என்றான். எலியாவின் சொற்படியே அவள் செய்தாள். கர்த்தர் தேசத்தின் மேல் மழையைக் கட்டளையிடும் நாள் மட்டும் பானையின் மா செலவழியுமில்லை. கலசத்தில் எண்ணெய் குறைந்து போகவுமில்லை. எலியாவும் அவளும் அவள் வீட்டாரும் அநேக நாள் சாப்பிட்டார்கள். பாருங்கள் அவளுக்கிருந்த கொஞ்சம் பொருளை கர்த்தர் முதலாவது கேட்டார். அதற்கு அவள் கீழ்ப்படிந்த போது கர்த்தர் பெரிய ஆசீர்வாதத்தை கொடுத்தார். "எதை செய்தாலும் அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல் கர்த்தருக்கென்றே மனுப்பூர்வமாய் செய்யுங்கள் (கொலோ–3:24) இப்படி ஆண்டவர் மேல் நம்பிக்கை வைத்து தேவ வார்த்தைகளுக்கு கீழ்படியும்போது பெரிய ஆசீர்வாதங்களை இயற்கைக்கு மேற்பட்ட அதிசயங்களை நம் வாழ்க்கையில் பெற்றுக்கொள்ளலாம்.

## 3. கழுதை...

இயேசு இந்த உலகத்தை விட்டு கடந்து போகும் நாள் நெருங்கி வந்த போது ஒரு நாள் தம் சீஷர்களை நோக்கி இருவழியில் சந்தியில் கட்டிருக்கும் ஒரு கழுதையை அவிழ்த்துக்கொண்டு வரும்படிக் கேட்டார். யாராது கேட்டால் அது ஆண்டவருக்கு வேண்டும் என்று சொல்லுங்கள் என்றார். அதேவிதமாய் அவர்கள் செய்து அந்தக்கழுதையைக் கொண்டு வந்தார்கள். ஆண்டவர் அதன்மீது அமர்ந்து பவனியாக எருசலேமுக்கு சென்றார். எல்லோரும் வந்து தங்கள் வஸ்திரங்களை வழியிலே விரித்தார்கள். கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற ராஜா ஸ்தோத்தரிக்கப்பட்டவர். பரலோகத்திலே சமாதானமும் உன்னதத்திலே மகிமையும் உண்டாவதாக என்று மிகுந்த சத்தத்தோடே தேவனை புகழ்ந்தார்கள். இயேசு வேண்டும் என்று தேர்ந்தெடுத்த கழுதைக்கு கிடைத்த பாக்கியத்தை பாருங்கள். அது ஆண்டவரை ஏற்றிக்கொண்டு அமைதியாக சென்றது. ஆம் பிரியமானவர்களே, நீங்களும் நானும் இயேசு ஏறிச்செல்லும் கழுதை நம்மை அர்ப்பணிப்போம் என்றால் நம்மேல் இருக்கும் இயேசு கிறிஸ்துவினால் நமக்கு ஐசுவரியமும் கனமும் மகிமையும் உண்டாகும். இயேசு சாதாரண கழுதையைக் கேட்டார் அதை அவரிடம் கொண்டு வந்தபோது அது மகிமையான கழுதையாய் மாறிவிட்டது (லூக்கா 19:30–40)

ஐந்து அப்பம் இரண்டு மீனைக்கொண்டு ஐயாயிரம் புருஷரை போஷித்த சமயத்தில் ஒரு சிறுவன் அந்த ஐந்து அப்பம் இரண்டு மீனை

ஆண்டவரிடம் கொடுத்தான். அதை அவர் வாங்கி அண்ணாந்து பார்த்து ஆசீர்வதித்து பகிர்ந்து கொடுத்த பொழுது அது பல்லாயிரமாய் பெருகியது.(மத்–14:17–21) மீதியானியிடமிருந்து இஸ்ரவேல் மக்களை பாதுகாப்பதற்காக கர்த்தர் கிதியோனை தெரிந்தெடுத்தார். அவனைப்பார்த்து உனக்கிருக்கிற இந்த பலத்தோடே போ. நீ இஸ்ரவேலை மீதியானிரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிப்பாய். உன்னை அனுப்புகிறவர் நானல்லவா? என்றார். (நியாதி–6:14) இப்படி அவன் தனக்கிருந்த பலத்தோடு புறப்பட்டபோது வெறும் 300 பேரைக்கொண்டு மீதியானியரின் இராணுவத்தை முறியடித்தான். ஆம் பிரியானவர்களே, ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்ப்பதெல்லாம் சிறிய விசுவாசமும், சிறிய நம்பிக்கையும், வேத வசனங்களுக்கு கீழ்ப்படிதலையும் பரிசுத்தத்தையும் மாத்திரமே. இவைகளை ஆண்டவருக்கு கொடுக்கும்போது அதை பல மடங்காக ஆசீர்வதித்து நமக்கு திரும்பக்கொடுப்பார். இப்படி ஞானமாக நடந்து ஏழை எளிய மக்களுக்கு உதவிகள் செய்து நீதியையும் நியாயத்தையும் நிறைவேற்றும்போது கர்த்தர் பெரிய ஆசீர்வாதங்களை தருவார்.

இந்த சிறியரில் ஒருவனுக்கு எதை செய்தீர்களோ? அதை எனக்கே செய்தீர்கள் என்று கூறினார். ((மத்–25:40) அதே போல வெறும் இரண்டு துட்டு போட்ட ஏழை விதவையை ஆண்டவர் மிகவும் கனப்படுத்தினார். ஆண்டவருக்கா நாம் தரும் நேரங்கள், ஆண்டவருக்காக நாம் செலவிடும் தாலந்துகள், ஆண்டவருக்காக நாம் உழைக்கிற உழைப்புகள், ஆண்டவருக்காக நாம் சிந்து வியர்வை, ஆண்டவருக்காக நாம் படும் பிரயாசங்கள், ஆண்டவருக்கு நாம் செய்யும் தியாகங்கள் இவைகளே தேவையான ஒன்று, இவைகளே நம்மை விட்டு எடுபடாத நல்ல பங்கு. (லூக்–10:42)

வரும் அக்டோபர் மாதம் முழுவதும் ஞானமாக கர்த்தர் விரும்புகிற காரியங்களை அவரிடம் கொடுப்போம். முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது உங்களுக்கு கூட கொடுக்கப்படும் (மத்–6:33)

கர்த்தர் தாமே உங்கள் ஒவ்வொருவரையும் அக்டோபர் மாதம் முழுவதும் வழி நடத்துவாராக.

கர்த்தரின் பணியில்,
உங்கள் அன்பு சகோதரன்
S.ஸ்டாலின்...



# தேவ செய்தி

## அழைப்பு

கர்த்தர் நல்லவர் அவர் கிருபை என்றுமுள்ளது. இந்த வேளையில் கூட அழைப்பை குறித்து சில காரியங்களை உங்களுடன் பகிர்ந்துகொள்ள கர்த்தர் செய்த கிருபைக்காக கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன். கர்த்தரின் நாமம் மகிமைப்படுவதாக.

**மோசே**

ஒரு நல்ல போர்வீரன் எகிப்தினுடைய சகல சாஸ்திரங்களிலும் கற்று தேர்ந்தவனாக இருந்தார், ஆனால் கர்த்தர் அவரை உன்னதமான ஒரு பணிக்காக கர்த்தர் அழைத்தார்.

**ஆமோஸ்**

ஒரு நல்ல மேய்ப்பர், மேய்க்கனாக இருந்தவனை கர்த்தர் தீர்க்கதரிசியாக கர்த்தர் ஏற்படுத்தினார்.

**தாவீது**

வாழ்க்கையிலே சாதாரணமாக ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தவர், கர்த்தர் அவரை தம்முடைய ராஜ்ஜியத்தின் பணிக்காக, ராஜ்ஜிய பாரம் செய்யவும்,தம்முடைய மக்களை ஆளும்படியான ஒரு ஸ்தலத்திலே கர்த்தர் அவரை வைத்திருந்தார்.

பேதுரு, யாக்கோபு இவர்கள் மீன் பிடிக்கிறவர்களாக இருந்தார்கள் அவர்களை கர்த்தர் சீஷர்களாக,அப்போஸ்தலர்களாக ஏற்படுத்தினார்.

**மத்தேயு**

இவர் (Was a Tax Collector) ஆயத்துறையிலே பணிபுரிந்து கொண்டிருந்தவரை கர்த்தர் ஊழியத்திற்கென்று அழைத்தார், அதுபோல கூடார வாசியாக இருந்து கூடார தொழில் செய்து கொண்டிருந்த பவுலை கர்த்தர் தம்முடைய ராஜ்ஜியத்தின் பணிக்காக அழைத்து கர்த்தர் அவர்களை பயன்படுத்தினார்.

**லூக்கா**

ஒரு மருத்துவராக இருந்தார் கர்த்தர் அழைத்து அவரை பயன்படுத்தினார்.

**எலிசா**

என்பவர் ஒரு விவசாயியாக இருந்தார் கர்த்தர் அழைத்து தம்முடைய அவரை ஊழியத்திலே பயன்படுத்தினார்.

இந்த வேளையில் கூட நம் எல்லோருக்கும் தெரிந்த வேதப்பகுதி மத்தேயு 28-ம் அதிகாரம் 19,20- ஆகையால் நீங்கள் புறப்பட்டுபோய், சகல ஜாதிகளையும் சீஷராக்க, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட

யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்று வாசிக்கிறோம்.

ஆகவே ஆண்டவர் பரமேறி போவதற்க்கு முன்பாக, கடைசியாக இந்த பூமியிலே அவர் சொல்லிவிட்டுப்போன முக்கியமான செய்தி என்னவென்று சொன்னால் நீங்கள் புறப்பட்டு போய் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள் அல்லேலூயா, எனவே இந்த சுவிசேஷ ஊழியம் நம்மேல் விழுந்த கடமையாக இருக்கிறது, நான் சுவிசேஷத்தை பிரங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ என்று பவுல் சொல்லுகின்றார். ஆகையால் நாம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனங்கள் மாத்திரமல்ல, பிரித்தெடுத்து அழைக்கப்பட்ட ஜனங்களாக இருக்கிறோம். ஆண்டவர் நம் எல்லோரையும் ஊழியத்திற்காக அழைத்திருக்கிறார். ஆண்டவர் பரமேறி போவதற்க்கு முன்னால் சொன்ன இந்த வார்த்தைகளை மகா பிரதான கட்டளை என்று சொல்கிறார்கள் ஏனென்றால் நாம் உலகமெங்கும் புறப்பட்டு போய் சகல ஜாதிகளுக்கும் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும் என்பது தான்.

குறிப்பாக அப்-1:8-ல் பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்று வாசிக்கிறோம்.சாட்சி என்பது, கர்த்தர் எனக்கு தலை வழியை சுகமாக்கினார், கடன் பிரச்சனையை மாற்றினார், பிள்ளைகளுக்கு பள்ளியில் Admission கிடைக்க உதவி செய்தார் என்பது மாத்திரமல்ல, உலகமெங்கும் சென்று சகல ஜாதிகளுக்கும் சுவிசேஷத்தை அறிவித்து ஊழியத்தில் அவருக்கு சாட்சியாக இருப்பது தான்.

ஆகவே பரிசுத்த ஆவியானவர் சபையில் ஊற்றப்பட்ட நோக்கமே, சபையிலே அந்நிய பாஷைகளை பேசி ஆராதிப்பதற்காக மாத்திரமல்ல, அவரது பிரதான நோக்கமே ஆவியின் நிறைவை, வரத்தை பெற்ற அனைவருமே கர்த்தருக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்பது தான்.

கர்த்தர் தாமே நம்மை ஆசீர்வதித்து வரும் அக்டோபர் மாதம் முழுவதும் வழி நடத்துவாராக அல்லேலூயா.

கர்த்தரின் பணியில்,
உங்கள் அன்பு சகோதரி
எப்சிபா ஸ்டீபன்...

## சகோதரிகள் பகுதி

### ஜெபங்களுக்கு பதில் உண்டு

நமது ஜெபங்களுக்கு பதில் கிடைப்பது நமது தற்செயலான காரியங்களால் அல்ல, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நமக்காக பரிந்து பேசுவதாலும், அவர் நமக்காக சிந்திய இரத்தத்தினாலும் உறுதிபடுத்தப்பட்டுள்ளது. இப்பொழுதும் நாம் ஜெபிக்க வேண்டிய சில முறைகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள கர்த்தர் செய்த கிருபைக்காக கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன்.

### 1. உரிமையுடன் ஜெபிக்க வேண்டும்...

இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் பிதாவினிடத்தில் தைரியமாக கேட்பதற்கு நமக்கு உரிமை உண்டு. நாம் உரிமையுடன் தைரியமாக இயேசு கிறிஸ்துவின் பெயரால் கேட்க வேண்டும். இயேசு கிறிஸ்துவின் பெயரால் வேண்டிக்கொள்கிற யாவற்றிற்கும் நிச்சயமாக பதில் உண்டு. யோவான் 14:13,14-ல் நீங்கள் என் நாமத்தினால் எதைக்கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமை படும்படியாக நான் அதைச் செய்வேன், என்றும் என் நாமத்தினாலே நீங்கள் எதைக்கேட்டாலும் அதை நான் செய்வேன் என்றும் வாசிக்கிறோம். மேலும் யோவான் 16:23-ல்- மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்கு சொல்லுகிறேன், நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார்.

### 2. விசுவாசத்துடன் ஜெபிக்க வேண்டும்...

பிலி-4:6 நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள். என்றும் ரோம -8:32 – தம்முடைய சொந்த குமாரனென்றும்பாராமல், நம்மெல்லோருக்காகவும் அவரை ஒப்புகொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? என்று வாசிக்கிறோம். நாம் எதை கேட்டாலும் பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசத்துடன் கேட்டால் பெற்றுக் கொள்வோம் மாற் 11:24.

## 3. தேவ சித்தத்திற்கு ஏற்ப ஜெபிக்க வேண்டும்...

1 யோவான்-5:14-நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின் படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம் என்று வாசிக்கிறோம். நாம் தேவனுடைய சித்தத்தை அறிந்து அதன் படி ஜெபிக்கும் போது நம் ஜெபத்திற்கு பதில் நிச்சயமாய் வரும். கொலோ 3:13-ல் கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் என்று நாமும் பிறரின் தவறுகளை மன்னித்தால் நம் ஜெபத்திற்கு பதில் வரும். யோவான் 15:7 -ல் பார்க்கிறோம், நீங்கள் என்னிலும், என் வார்த்தை உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுகொள்ளுவதெதுவோ அது உங்களுக்கு செய்யப்படும் ஆகவே நாமும் கர்த்தரின் வார்த்தையில் நிலைத்திருந்தால் நம் ஜெபத்திற்கு கண்டிப்பாக பதில் வரும்.

நம்மை நாமே ஆராய்ந்து பார்த்து ஜெபித்து பதிலைப் பெற்றுக்கொள்வோம். கர்த்தர் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக.

இப்படிக்கு
உங்கள் அன்பு சகோதரி...

## அப்போஸ்தலர் நடபடிகள் ஒரு பார்வை

எழுதியவர் – மருத்துவனாகிய லூக்கா
எழுதப்பட்ட காலம் – கிபி 63

எழுதப்பட்டதன் நோக்கம் – திருச்சபை வளர்ச்சி

### புத்தக தொகுப்பு

1. பாலஸ்தீனாவில் திருச்சபை வளர்ச்சி( 1:1-12-25 )
2. அந்தியோகியாவிலிருந்து ரோமாபுரிவரை திருச்சபை வளர்ச்சி (13:1-28,31 )

அதிகாரங்கள் 28 – வசனங்கள் 1007

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

" உன் பேரை பெருமைப்படுத்துவேன்
நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் " ( ஆதி–12:2 )

செல்வன். நத்தானியேல் நக்கீரன்
செல்வி. ஷாலோம் கிரேஸ் ஆமோஸ்
செல்வன். ஜோசப் அருள் தர்மர்
சகோ. சுஜின் ஹெக்கல்
செல்வன். சாலமோன் இம்மானுவேல்
சகோதரி. டாப்னி ஜெபசிங்
சகோ. ஸ்டாலின் சுனில்
சகோதரி. ஜீவரத்தினம் மகேஷ்ராஜ்
செல்வன். ஜீவன் ஆஷ்வா பிரசாத்
செல்வன். ஜோஷ்வா ராமர்
சகோ.வர்கீஸ்
செல்வி. ரியா பிரிட்டி ஸ்டீபன்
செல்வன். ஆதீத் சிங் சுபின் சிங்
செல்வி.வைதேகி கலியமூர்த்தி
செல்வன். லீதாஹரன் ராஜாகுமார்

செல்வி. லெனிஷா வர்கீஸ்
செல்வன். அனீஷ் தினேஷ்
செல்வி. பிரியங்கா சதீஷ்குமார் எத்திராஜ்
சகோ. மார்க் ஆன்டனி
சகோதரி. தமிழ்செல்வி
சகோதரி. சாந்தி கண்ணன்
சகோதரி. அனிஷா ஆல்வின்
செல்வன். ரோஷன் அசோக்குமார்
செல்வி. அரோலினா விஜயன்
செல்வன். கேபரியேல் ஜெரேமியா
சகோ. ஜெயக்குமார் ஞானதாஸ்
சகோ. தம்புகுமார் டென்னிஸ்
சகோதரி. ஜெபராணி
செல்வி. இபின் காட்சில் ஜெயகுமார்
சகோதரி. மரகதம் ஸ்டீபன்
சகோதரி.பியூலா மெர்ஸி ஜெகநாதன்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும்
சாட்சியாயிருக்கிறார் (மல்கியா 2:14)

திருமதி/திரு. குமாரசாமி – லீலா
திருமதி/திரு. விபின் – ஜெபராணி
திருமதி/திரு ஜான் கெஸ்டன்– ஜெனிஸ்
திருமதி/திரு. செங்குட்டுவன் – பிரிசில்லா
திருமதி/திரு. ராஜா குமார்–பானு ராதா மணி

# 2024 – அக்டோபர் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:30 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 06/10/2024 | சகோ. M.கிறிஸ்டோபர் | சகோ. ஸ்டாலின் |
| 13/10/2024 | சகோ. சிவக்குமார் | சகோ. தாமஸ் |
| 20/10/2024 | சகோ. ஜான் போஸ்கோ | சகோ. ஆரோக்கியதாஸ் |
| 27/10/2024 | சகோ. சுபின் சிங் | சகோ.அருண் இம்மானுவேல் |

## வெள்ளி ஆராதனை மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 04/10/2024 | சகோ. சுகுமார் | சகோ. ஸ்டாலின் |
| 11/10/2024 | சகோ. ரவிஜான் பீட்டர் | சகோ. பிரசாத் |
| 18/10/2024 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 25/10/2024 | சகோ. வேலுராமர் | சகோ. ஆண்டனி |

## ஆராதனை ஒழுங்குகள்

**11/10/2024**

**பொதுமன்ற கூடுகை**

இடம் – Hormony Square Mangaf

நேரம் – மாலை 7:00 முதல் இரவு 8:30 மணி வரை

**சங்கிலி தொடர் ஜெபம்**

03/10/2024 மாலை 6:00 முதல் 04/10/2024 காலை 6:00 வரை

**10/10/2024 அன்று முழு இரவு ஜெப ஆராதனை**

இடம் – பின்னர் அறிவிக்குப்படும்

நேரம்– இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணி வரை

**25/10/2024 அன்று வாலிபர் ஐக்கிய கூடுகை**

இடம் – Hormony Square Mangaf

நேரம் – மாலை 6:30 முதல் இரவு 8:00 மணி வரை

வேத வினா பகுதி – ஓசியா

**சகோதரிகள் ஐக்கிய கூடுகை தேதி பின்னர்அறிவிக்கப்படும்**

இடம் – செலின் டேவிட் வீடு

நேரம் – மாலை 6:30 முதல் இரவு 8:00 மணி வரை

வேத வினா பகுதி – மாற்கு

**சனிக்கிழமை**

சிறுவர் வேதாகம பள்ளி

இடம் – பரிசுத்த பவுல் ஆலயம் அஹமதி

நேரம் – மாலை 4:00 முதல் 5:30 ரை

**திங்கட்கிழமை**

பெண்கள் ஐக்கிய ஜெப கூடுகை

இடம் – செலின் டேவிட் வீடு

நேரம் – மாலை 5:30 முதல் 6:30 வரை

**செவ்வாய்கிழமை**

குடும்ப ஆசீர்வாத ஜெப கூடுகை

இடம் – பரிசுத்த பவுல் ஆலயம் அஹமதி

நேரம் – மாலை 4:00 முதல் 5:30 ரை

**வியாழக்கிழமை**

பாடல் பயிற்சி கூடுகை

இடம் – எபினேசர் வீடு

நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

# 2024 அக்டோபர் மாதத்திற்கான வேத வினா!

**கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**



1. திவ்விய சவுந்தர்யமுள்ளவனாயிருந்தவன் யார்?
2. எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தவன் யார்?
3. ஒருமனப்பட்டு ஜெபத்தில் தரித்திருந்தவர்கள் யார்?
4. மந்தையை தப்பவிடாத கொடிதான ஓநாய்களை பற்றி வாசிப்பதெங்கே ?
5. வேதாமங்களில் வல்லவன் எனப்பட்டது யார்?
6. கர்த்தருக்கு அவர்களை ஒப்புவித்தார்கள் அவர்கள் யார் ?
7. யாருடைய முகம் தேவதூதன் முகம் போலிருந்தது?
8. சகல பட்டினங்களிலும் சுவிஷேசத்தை பிரசங்கித்துக் கொண்டு வந்தவர் யார் ?
9. அந்தியோகியாவிலே சஞ்சரித்து, கர்த்தருடைய வசனத்தை உபதேசித்து பிரசங்கித்து கொண்டிருந்த இருவர் யார் ?
10. தகப்பன் கிரேக்கன், தாய் யூதஸ்திரி, இவர்களுக்கு பிறந்த மகன் யார்?
11. இரத்தாம்பரம் விற்று வந்த ஒரு ஸ்திரீ யார்?
12. பவுலை வாயில் அடியுங்கள் என்று சொன்ன பிரதான ஆசாரியன் யார்?
13. தன் வீட்டாரோடு இயேசுவை விசுவாசித்து ஏற்றுக் கொண்ட ஜெபாலயத் தலைவன் யார்?
14. நியாசனத்துக்கு முன்பாக அடிபட்ட ஜெபாலாயத் தலைவன் யார்?
15. கிறிஸ்துவின் சீஷர்களை ஜெப ஆலயங்களில் வைத்து அடித்தவன் யார்?

**...தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; – மத்தேயு 7:7**

விடைகளை வருகின்ற 20-11-2024 க்குள்
(WhatsApp #+91 8940523562) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில்
**" அப்போஸ்தலர் நடபடிகள் "**
அதிகாரங்களில் இருந்து பதிலை கண்டுபிடிக்கவும்.

## 2024 – செப்டம்பர் மாத வேத வினாவுக்கு விடைகள்

1. துர்க்குணம், பொல்லாப்பு
   துப்புரவு, உண்மை( I கொரி 5:8 )
2. அப்போஸ்தல ஊழியத்திற்கு ( I கொரி 9:2 )
3. மேன்மையான ( I கொரி 12:31 )
4. அவயங்கள் ( I கொரி 6:15 )
5. தகப்பன்மார் அநேகர் ( I கொரி 4:15 )
6. இயேசுவின் சரீரம் ( I கொரி 11:24 )
7. கெடுத்தால், கெடுப்பார் ( I கொரி 3:17 )
8. ஞான நன்மைகள் ( I கொரி 9:11 )
9. கிறிஸ்துவே ( I கொரி 10:4 )
10. வானவருடைய சாயலை ( I கொரி 15:49 )
11. அன்பு ( I கொரி 8:1 )
12. சமாதானத்திற்கு ( I கொரி 14:33 )
13. அன்போடே ( I கொரி 16:14 )
14. அன்பு ( I கொரி 13:3 )
15. பரீட்சை ( I கொரி 10:9 )

## 2024– செப்டம்பர் மாத வேத வினாவுக்கு

## பதில் எழுதியவர்கள்

SIS. சுகந்தி தம்பு குமார்
SIS. பியூலா மெர்சி பால்
SIS. நித்யா ஜோன்ஸ்
SIS. வனிதா
SIS. மரிய குளோரி தாஸ்
SIS.ஜான்சி ராணி
SIS. ஜெஸ்லட் வர்க்கீஸ்
SIS. சாந்தி

## மிஷனரி செய்திகள்

# ஜேம்ஸ் பிரேசர் (1886–1938)

உறைபனி தவழும் செங்குத்தான மலைகளையும், துஷ்ட மிருகங்கள் உலவும் காடுகளையும் கடந்து லிசு என்ற இனத்தவர் வாழும் சீனாவின் தென்மேற்குப் பகுதிக்கு தனது இருபத்திரண்டாவது வயதிலேயே ஊழியம் செய்ய இங்கிலாந்திலிருந்து சென்றவர் ஜேம்ஸ் பிரேசர். 1886–ம் ஆண்டு லண்டன் மாநகரில் பிறந்த ஜேம்ஸ் ஒரு கிறிஸ்தவ விசுவாசக் குடும்பத்தில் பிறந்து கிறிஸ்தவ நெறிகளில் வளர்க்கப்பட்டார். தன்னுடைய பள்ளிப் படிப்பில் சிறந்து விளங்கிய இவர் லண்டன் பல்கலைக்கழக மெட்ரிகுலேஷன் தேர்வில் இங்கிலாந்து நாட்டின் சிறந்த மாணவர்களில் ஒருவராகத் தேர்ச்சி பெற்றார். கல்லூரி நாட்களில் பக்திக்கடுத்த காரியங்களில் அதிக சிரத்தை காட்டியதோடு ஓய்வுநாள் பள்ளி ஊழியத்திலும் ஈடுபட்டு வந்தார். தான் ஒரு முழுநேர ஊழியனாகச் செல்ல வேண்டும் என்பதைப் பற்றி அவர் ஒருநாளும் நினைத்துப் பார்க்கவில்லை. தான் ஒரு தலை சிறந்த பொறியியல் வல்லுநர் ஆக வேண்டுமென்ற வாஞ்சையே அவரது உள்ளத்தில் நிறைந்திருந்தது. ஆனால் அவரது பக்தியுள்ள தாயாரான ஆனி பிரேசர் தனது பிள்ளைகளில் ஒருவராவது மிஷனெரியாக மாற வேண்டுமென்று ஊக்கமாக ஜெபித்து வந்தார்.

ஜேம்ஸ் தான் எதிர்பார்த்தது போலவே தனிச்சிறப்பான வகையில் பொறியியல் பட்டப்படிப்பில் தேர்ச்சிபெற்றார். அப்போது அவர் வாசித்த ஒரு சிறுபுத்தகம் அவருடைய வாழ்க்கைப் பாதையையே மாற்றி அமைத்துவிட்டது "அப்படிச் சொல்லாதீர்கள்" என்று தலைப்பிட்ட அந்த சிறு புத்தகம் சீனாவில் அருட்பணியாளராக ஊழியம் செய்த ஒருவரால் மிஷனெரி ஊழியத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி எழுதப்பட்டிருந்தது.

இருபதாம் நூற்றாண்டு துவங்கிவிட்ட பின்னரும் இன்னும் உலகத்தில் பெரும்பாலானோர் இரட்சிப்பின் செய்தியைக் கேள்விப்பட மிஷனெரிப்பணி என்பது போதகர்களும் சபைகளும் மட்டுமே கவனிக்க வேண்டிய காரியங்கள் என்று சொல்லாதீர்கள் என்று அவர் அப்புத்தகத்தில் குறிப்பிட்டிருந்தார். ஜேம்ஸ் இத்தகைய மனோபாவத்தைத்தான் கொண்டிருந்தார். எனவே அப்புத்தகத்தை வாசித்தது முதல் அவர் அருட்பணி ஊழியங்களைப் பற்றி சிந்திக்கத் துவங்கினார். மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாறுகளை வாசிக்கத் துவங்கினார். சீன உள்நாட்டு அருட்பணி சங்கத்தை நிறுவி சீனாவில் வல்லமையாக ஊழியம் செய்த ஹட்சன் டெய்லரின் வாழ்க்கை வரலாறு அவர் உள்ளத்தை அதிகம் தொட்டது. ஒரு நாள் தனது வீட்டின் மேலறையில் ஜெபிக்கும்போது சீன நாட்டு மக்களைப் பற்றிய பாரம் அழுத்தவே தன்னை

ஊழியத்துக்கு அர்ப்பணித்தார். ஜெபித்து முடித்து தன் தாயின் அருகே வந்து நான் முழுநேர ஊழியத்துக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறேன் என்று உற்சாகத்தோடு கூறினார். முழுங்காற்படியிட்ட ஆனி பீரேசர் தனது நீண்ட கால ஜெபம் கேட்கப்பட்டதற்காக தேவனைத் துதித்தார். அதுமுதல் ஊழியத்திற்காகத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ளும் பணியில் ஈடுபட்ட அவர் தன்னைச் சுற்றி வாழும் மக்களுக்கு இயேசுவைச் சொல்லும் ஆத்தும ஆதாயப்பணியில் ஈடுபடத் தொடங்கினார்.

சீனநாட்டின் தென்மேற்குப் பகுதியில் பர்மிய நாட்டு எல்லைக்கு அருகேயிருந்த டெங்குவே என்ற சிறிய பட்டணத்தில் அவரது ஊழியப் பயணம் ஆரம்பமானது. அங்கு முதல் ஆறுமாதம் சீன மொழியைக் கற்றார். இந்தப் பகுதியில் சீனர்கள் மட்டுமின்றி ஹாண், கக்கின், லிசு போன்ற பழங்குடி இனத்தவர்களும் வாழந்து வந்தனர். எளிய ஆடையுடன் வடக்கே மலைப்பகுதியிலிருந்து ஆறு நாட்கள் பணயம் செய்து டெங்குவே வந்து ஒரு நான்கு பேர் தங்கள் மலைப்பகுதியில் வந்து ஊழியம்செய்ய அழைத்தனர். சீன மொழியில் பயிற்சி பெற்று பிரசங்கம் செய்யும் அளவு தேர்ச்சிபெற்ற நிலையில் லிசு இனத்தவரை நோக்கி தனது பயணத்தைத் தொடர்ந்தார். வாய்ப்பு வரட்டும் என்று காத்திருப்பது சாத்தானின் சோதனைகளில் ஒன்று என்றும் ஊழியத்த்துக்கான வாய்ப்புகளுக்காகக் காத்திருக்கும்படி வேதாகமம் ஒருபோதும் நமக்குப் போதிக்கவில்லை. கைக்குக் கிட்டும் கரியங்களில் ஊழியம் செய்யும்படியே கட்டளையிடுகிறது என்று தனது டைரியில் எழுதி வைத்தார் ஜேம்ஸ் பிரேசர். லிசு பழங்குடியினர் மலைச்சரிவுகளில் வசித்து வந்தபடியால் சீனர்கள் இவர்களைக் குரங்கு மனிதர்கள் என்றே அழைத்தனர். ஆனால் இவர்களே சீனாவின் பூர்வக்குடிகள் என்று வரலாறு தெரிவிக்கிறது. லிசு மக்களை நோக்கிப் பயணத்தைத் துவங்கும்போது ஜேம்சுக்கு வயது இருபத்திரண்டு மட்டுமே. வெகுநாள் பயணத்திற்குப் பிறகு பாவோஷானுக்கு அருகேயுள்ள மலைத் தொடர்கள் உள்ள பகுதியை வந்தடைந்தார். அப்பகுதியில் இலட்சத்துக்கும் மேற்பட்ட லிசு பழங்குடியினர் வசித்து வந்தனர். இவர்கள் நற்செய்தியை அதுவரை கேள்விப்பட்டதில்லை. எந்த மிஷனெரியும் அங்கு சென்று ஊழியம் செய்ததும் கிடையாது.

1913–ஆம் ஆண்டு ஏப்ரல் 20ம் நாள் டெங்குவே நீர்வீழ்ச்சிக்கு அருகே தனது முதல் ஞானஸ்நான ஆராதனையை நடத்தினார். அதில் தனது சமையல்காரரோடு கூட ஒரு ஆசிரியரும், தண்ணீர் சுமப்பவரான டாஸ் என்பவரும் ஞானஸ்நானம் பெற்றார்கள். ஜேம்ஸ் முதலாவது இவர்களது மொழியைக் கற்க ஆரம்பித்ததோடு தாய் மொழியில் அவர்களுக்கு சுவிசேஷத்தைச் சொல்ல ஆரம்பித்தார். பிரேசர் தனது உடைப் பழக்கத்திலும் லிசு பழங்குடிகளின் ஆடை அலங்காரத்தையே பின்பற்றினார். இப்போது அவரால் லிசு மொழியில் சரளமாகப் பேசமுடிந்தது. சுவிசேஷத்தால்

கவரப்பட்ட லிசு இனத்தவர் தாங்கள் அம்மட்டும் வணங்கி வந்த பேய் மேடையைக் கொளுத்திவிட்டு இயேசுவை ஏற்றுக்கொண்டனர். பிரேசர் பணிமூலம் 129 குடும்பங்களைச் சேர்ந்த 600-க்கும் மேற்பட்டவர்கள் ஆதாயம் பண்ணப்பட்டனர். மாட்டில்ட் ஹில் என்ற இடத்தில் சிற்றாலயமும் கட்டப்பட்டது. லிசு மொழியில் வேதத்தை மொழி பெயர்க்க ஆரம்பித்து மாற்கு, யோவான் சுவிசேஷத்தை முதலில் மொழிபெயர்த்து முடித்தார் பிரேசர். பல தன்னார்வ லிசு நற்செய்தியாளர்களை ஏற்படுத்தி, அவர்களுக்கும் ஊழியம் செய்ய பயிற்சி கொடுத்தார். முன்னோடி மிஷனெரி ஊழியத்தில் மூழ்கியிருந்த ஜேம்ஸ் பிரேசருக்கு தனது மணவாழ்வைப்பற்றி தீவிரமாய் யோசிக்க நேரம் இருக்கவில்லை.

தனது 43-வது வயதில் ஊழியத்தம்பதியினரான பிராஸ்க் டைமண்ட் தம்பதியினரின் மகளான ராக்சியை தன் வாழ்க்கைத் துணையாகத் தெரிந்தெடுத்து மணந்து கொண்டார். இவர்கள் குடும்பமாக தேவபணி செய்தனர். குக் குடும்பத்தினருடன் சேர்ந்து முழு புதிய ஏற்பாட்டையும் மொழிபெயர்த்து முடித்தார். திடீரென ஜேம்ஸ் பிரேசருக்கு மலேரியா ஜீரம் கண்டது. அதை அவர் கண்டறிவதற்குள் மலேரியா கிருமிகள் அவரது மூளையைத் தாக்கியிருந்தன. தொடர்ந்து இரண்டு நாட்கள் கடுமையான காய்ச்சலினால் கஷ்டப்பட்ட அவர் சுய நினைவிழந்தார். 1938-ம் ஆண்டு செப்டம்பர் 25-ம் நாள் ஜேம்ஸ் தனது 52-ம் வயதில் இவ்வுலக ஓட்டத்தை முடித்து தான் ஆசையாக நேசித்த பரமனின் பாதத்தில் இளைப்பாறச் சென்றார். பாலோஷான் ஆலயத்தில் நடந்த அவரது அடக்க ஆராதனை முழுவதுமாக லிசு மொழியிலேயே நடத்தப்பட்டது. பாலோஷானில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான லிசு பழங்குடிகள் பாடிய துதிப்பாடல்கள் சுற்றிலுமிருந்த மலைகள் பள்ளத்தாக்குகள் எங்கும் எதிரொலித்து ஜேம்ஸ் பிரேசரின் ஊழிய வாழ்க்கைக்கு சாட்சி பகர்ந்தன. இவரால் வழிநடத்தப்பட்ட லிசு இனத்தவர் பின்னர் புரட்சியாளர்களால் கொடுமைப் படுத்தப்பட்ட வேளையில்கூட தாங்கள் திட விசுவாசத்திலிருந்து பின்வாங்கவில்லை. இன்றும் இந்த இனத்தவரில் பலர் மியான்மாரிலும் சீனாவிலும் சாட்சியான வாழ்க்கை வாழ்ந்து வருகிறார்கள்.


கட்டடம் கட்டும் பொறியியல் பட்டப்படிப்பு முடித்த ஒரு ஜேம்ஸ் பிரேசர் தேவனுக்கு தன்னை அர்ப்பணித்தபோது பாவத்தில் கட்டப்பட்டிருந்த லிசு மக்களை கட்டவிழ்க்க தேவன் பயன்படுதியதோடு அம்மக்கள் மத்தியில் தேவ ராஜ்ஜியத்தைக் கட்டியெழுப்பும் சிற்பியாகவும் மாற்றினார். அவரால் திருப்பப்பட்ட லிசுமொழி வேதாகமம் இன்றும் நிரந்தர ஊழியன்போல அம்மக்கள் மத்தியில் செயலாற்றி வருகிறது. இன்றைய ஜேம்ஸ் பிரேசர்களுக்காய் தேவன் ஏக்கமாய் காத்துக்கொண்டிருக்கிறார்.

இப்படிப்பட்ட மிஷனெரிகளுக்காக நாம் ஜெபிப்போம் கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக ஆமென்.

Kids Corner

# The Baptism of Jesus

Connect the Dots




The Spirit of God descending like a dove.
Matthew 3:16, Mark 1:10, Luke 3:22

Sermons4Kids.com

Name:______________________________ Date:________________

Find the words listed. Words may appear forward, backward, up, down or diagonal. Words may overlap and cross each other. When you have found a word, be sure to circle it and cross it off the list.



# Prayer

## Word Search






| | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| L | W | K | P | G | F | Q | D | E | G | T | H | Y | T | R | V |
| T | B | R | E | A | D | E | N | M | L | R | L | J | F | N | G |
| G | Q | T | T | Z | N | O | K | K | V | E | V | F | J | E | B |
| Q | Q | H | K | I | D | P | N | D | D | V | N | M | K | M | G |
| K | E | J | H | K | N | D | K | N | C | I | T | X | E | A | T |
| R | W | T | W | R | A | V | K | L | Z | L | M | T | V | L | M |
| F | R | K | N | Y | T | T | R | O | F | E | K | G | I | T | L |
| E | R | K | H | S | R | O | T | B | E | D | B | M | L | E | L |
| V | E | I | H | A | L | S | N | E | A | R | T | H | A | M | N |
| I | W | N | M | W | L | U | T | H | E | E | L | D | P | P | X |
| G | O | G | V | Y | M | D | S | B | E | V | V | G | W | T | P |
| T | P | D | R | N | C | A | N | W | E | A | I | E | D | A | K |
| N | K | O | Y | H | J | I | I | M | C | D | V | G | R | T | F |
| K | L | M | T | L | D | L | V | W | B | O | Z | E | R | I | T |
| G | E | M | A | N | L | Y | R | V | X | B | M | D | N | O | N |
| Y | Q | Z | R | H | A | L | L | O | W | E | D | E | N | N | F |



Our **Father** which **art** in **heaven**, **Hallowed** be **thy** **name**. Thy **kingdom** **come**, Thy **will** be **done** in **earth**, as it is in heaven. **Give** **us** this **day** our **daily** **bread**. And **forgive** us our **debts**, as we forgive our **debtors**. And **lead** us **not** into **temptation**, but **deliver** us from **evil**: **For** **thine** is the kingdom, and the **power**, and the **glory**, for **ever**. **Amen**.

Matthew 6:9-13




© 2024 WordsAreFun.com, All Rights Reserved.

# கடந்த மாத நிகழ்வுகளில் உங்கள் பார்வைக்கு சில



















# ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

## செயற்குழு உறுப்பினர்கள்

**முதன்மை ஊழியர் : சகோ. S.ஸ்டாலின்**
Ph.66021072 – 96760452

**செயலாளர் : சகோ.S.சுகுமார்**
Ph.99837646

**பொருளாளர் : சகோ.S.சிவ குமார்**
Ph.97224276

**பெண்கள் ஐக்கிய தலைவி: சகோதரி. செலின் டேவிட்**
Ph.65967170 – 99368775

**வாலிப ஐக்கிய தலைவர் : சகோ.சுபின் சிங்**
Ph.65197164–65772762

Follow us Social Media Youtube & Facebook – ATC TAMIL

Church 'E' mail ID – ahmaditamil.kw@hotmail.com

Church Website Address – ahmaditamilchurch.com

தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

**Church Postel Address**
Your name,,
Po. Box No : 46795.
Fahaheel,64018, Kuwait.

Private Circulation only